IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 71/2023

Deposition of Witness : PW1

Name : ஏகாம்பரம் (வயது – 51)

Father's Name /W/o : த/பெ ஆறுமுகம்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : காஞ்சிபுரம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 11.09.2025.

## 2 மற்றும் 3 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. தாவா சொத்திற்கு முருகன் முதல் பிரதிவாதி பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். முருகன் பெயரில் பட்டா வழங்கப்பட்டு 40 வருடத்திற்கு மேல் ஆகும் என்றால் இல்லை 1986 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. தாவா சொத்தை முதல் பிரதிவாதிதான் 40 வருடமாக அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை கூட்டாக அனுபவித்து வருகிறார். கூட்டாக அனுபவித்து வந்ததற்கு ஏதேனும் ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்தால்தான் மேற்படி கூட்டாக அனுபவித்து வருகிறோமா இல்லையா என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். முதல் பிரதிவதி எனக்கு தெரிந்தே 40 ஆண்டுகள் தாவா சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி 16.03.2023 தேதயில் 2, 3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை தான செட்டில்மெண்ட் செய்தார் என்றாலும் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் இன்றைய

தேதிவரை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்து குறித்து தனி பட்டா வழங்கப்பட்டது என்றாலும் அந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தாவா சொத்தில் பயிர் வைத்ததற்கு சாகுபடி அடங்கல் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல.

3. என் பெயரிலோ அல்லது மற்ற வாதிகள் தாவா சொத்து குறித்து அடங்கல் வழங்கப்பட்டதா என்றால் இல்லை. தாவா சொத்து 2 மற்றும் 3 ஆம் பிரதிவாதிகள் பெயரில் தான் உள்ளது என்றாலும அவர்கள் தான் அனுபவத்தில் உள்ளார்கள் என்றாலும் எனவே அவர்களை தாவா சொத்தில் இடையூறு செய்ய கூடாது என்ற பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி 2 ,3 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்த பத்திரம் உண்மையான ஆவணம் என்றாலும அது செல்லதக்கது அல்ல என்ற பரிகாரம் என்னால் கோரமுடியாது என்றால் சரியல்ல. 2,3 பிரதிவாதிகள் செப்டம்பர் மாதம் அத்து மீறி வழக்கு சொத்தில் நுழைந்தார்கள் என்று நான் தெரிவித்துள்ளது தவறு என்றால் சரியல்ல. எனவே பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 2,3 பிரிதிவாதிகளுக்கு சொந்தமானது என்றாலும் அவர்களுக்கு எதிராக பரிகாரம் கோர முடியாது என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி வேண்டும் என்றால் சரியல்ல.